DINAMANI

தினமணி

திங்கள்கிழமை, 10 ஏப்ரல், 2006

# பொன்விழா கொண்டாடும் சென்னை அட்வர்டைசிங் கிளப்



சென்னை விளம்பரக் கழக பொன்விழாவை குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைக்கிறார் நடிகர் மதன்பாப் (இடமிருந்து 2-வது).

---

சென்னை, ஏப். 10: 'புது வீடு, புது பைக்கு, புது மனைவி... கலக்குற சந்துரு' இந்த விளம்பர வாசகத்தை உச்சரிக்காதவர்கள் குறைவு. இதேபோல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்த விளம்பர வாசகங்கள் ஏராளம்.

இத்தகைய விளம்பரங்களின் பிரம்மாக்கள் எல்லாம் ஓரிடத்தில் குழுமியிருந்தால் விளையாட்டுக்கும் கேலிப் பேச்சுகளுக்கும் சொல்லவா வேண்டும்.

சென்னை விளம்பர கழகத்தின் (Advertising club of Madras) பொன்விழாவை ஒட்டி சென்னை அடையாறில் உள்ள பார்க் ஷெரட்டன் ஹோட்டலில் அதன் உறுப்பினர்கள் அனைவரும் குழுமியிருந்தனர்.

எப்போதும் பரபரப்பாக இயங்கும் அவர்கள் தங்களது வேலைகளை சில மணி நேரம் ஒதுக்கிவிட்டு அங்கு வந்திருந்தனர்.

இந்த பொன்விழாவை குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார் நடிகர் மதன்பாப். அப்போது அவர் பேசும்போது, இக்கழகத்தில் தன்னுடைய பங்களிப்பு குறித்து குறிப்பிட்டார். சிரித்துக்கொண்டே பேசும் அவரைப் போலவே அரங்கிலிருந்தவர்களும் சிரித்துக்கொண்டே அவரது பேச்சை ரசித்தனர்.

இந்த பொன்விழா கொண்டாட்டத்தின் தலைவர் ஆர்.வி. ராஜன் பேசும்போது, '1956-ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் தேதி 25 உறுப்பினர்களுடன் இக்கழகம் தொடங்கப்பட்டது. ஆனால், இப்போது ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது' என்றார்.

இதில் பார்வையாளர்களை மகிழ்விக்க பல்வேறு இசைப் போட்டிகளும், நடனப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

இதில் ஜெகன் என்பவர் செய்த 'மிமிக்ரி' அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. இதில் தெலுங்கில் கிரிக்கெட் வர்ணனை முதல் கோடம்பாக்கத்து நாயகர்கள் பேசுவது வரை செய்து காண்பித்தார். இந்த விழாவுக்கு இதுவே முத்தாய்ப்பாக இருந்தது.